සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)**

**காலம் 03 மணித்தியாலங்கள்**

**நிதி முறைகள் (05-I)**

විභාග අංකය
Index No / சுட்டெண்
......................................

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

---

1. அரசாங்க அலுவலகமொன்றின் மதிலொன்று இடிந்து விழுந்த காரணத்தினால் அதற்கு அருகில் இருந்த அரசாங்க வாகனமொன்றுக்கும் தனியார் வாகனமொன்றுக்கும் நட்டம் ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் ‘‘முழுமையான அறிக்கை’’ அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் பணி தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையைத் தயாரிக்கும் போது,

   i. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நட்டத்தை கண்டறிவதற்கு தாங்கள் பிரயோகிக்கும் நியதிகளை நி.ஒ. 102 பிரகாரம் விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. தாங்கள் தயாரிக்கும் ‘‘முழு அறிக்கையில்’’ நி.ஒ. 104(4) பிரகாரம் உள்ளடக்க வேண்டிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

   (மொத்தப் புள்ளிகள் 20)

2. i. திரட்டு நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு நிதி ஓதக்கீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமான ‘‘வழங்கல் சேவைகள்’’ மற்றும் ‘‘விசேட சட்ட சேவைகள்’’ தொடர்பான செலவினங்களை தனித்தனியாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ii. திரட்டு நிதியிலிருந்து செலவு செய்வதற்கு வருடாந்த செலவின மதிப்பீடுகளை சமர்ப்பிக்கும் போது வரவுசெலவுத்திட்ட வகைப்பாட்டுக் கூறுகளாகப் பயன்படுத்தப்படும் தலைப்பு, நிகழ்ச்சித்திட்டம், கருத்திட்டம் மற்றும் செலவினத் தலைப்புகள் என்பவற்றை விரிவாக விபரிக்க. (10 புள்ளிகள்)

   (மொத்தப் புள்ளிகள் 20)

3. i. நிர்மாண ஒப்பந்தமொன்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு தவணைக் கொடுப்பனவுகளை செலுத்தும் போது ஏற்புடைய கொடுப்பனவுகளுக்கு அங்கீகாரமளிக்கும் உத்தியோகத்தராக தாங்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

ii. நிர்மாண ஒப்பநந்தமொன்று தொடர்பில் செலுத்தப்பட வேண்டியுள்ள நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையை மீளச் செலுத்துவதற்கு வைப்பொன்றிலிருந்து மீளச் செலுத்தும் கொடுப்பனவை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தராக தங்களது பொறுப்பு யாது? (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

4. i. நிதியாண்டொன்றில் அதிகாரமளிக்கப்பட்ட (ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அங்கீகாரம்வழங்கப்பட்ட) கொடுப்பனவுகளுக்கு வழங்கப்படும் கட்டுநிதியை பிரிவின் உப கட்டுநிதியாக வழங்கும் போதும் அதனை மீண்டும் தீர்க்கும் போதும் பின்பற்றியொழுக வேண்டிய நடவடிக்கை முறையை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. சில்லறைக் காசு கட்டுநிதி மற்றும் நிமித்த கட்டுநிதி என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

5. அலுவலகத்திற்கு மடிக்கணினிகள் 100 ஐ கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் உறுப்பினர் ஒருவராக தாங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்.

i. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர் ஒருவராக தங்களது கடமை, பெறுகைக் குழு உறுப்பினர் ஒருவரது கடமையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. மேற்படி பெறுகை நடவடிக்கைக்காக வரைவு செய்யப்பட்ட பெறுகை ஆவணங்கள் தொகுதியொன்றின் பல்வேறு பகுதிகளை குறிப்பிட்டு அந்த ஒவ்வொரு பகுதியின் கீழும் வரக்கூடிய விடயங்கள் தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

6. i. பெறுகை வழிகாட்டு நெறிக் கோவை 2006 (பொருட்கள் மற்றும் வேலைகள்) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி விலைமனு மதிப்பீட்டின் குறிக்கோள்கள் மற்றும் அதன் கட்டங்களை விரிவாக குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ii. விலைமனு மதிப்பீட்டின் போது கவனத்திற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களிலிருந்தான சிறு விலகல்கள் மற்றும் பாரிய விலகல்கள் என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 20)

**************